**இலங்கை புவிச்சரிதவியல் நிறுவனம் - 2015**

இலங்கை புவிச்சரிதவியல் நிறுவனத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2014 இன் 03 ஆம் இலக்க இலங்கை புவிச்சரிதவியல் நிறுவன அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2) (சீ) பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தல் மற்றும் அமுல்படுத்துதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை புவிச்சரிதவியல் நிறுவனத்தின் 2015 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) நிறுவகத்தினால் மீளாய்வாண்டினுள் கையேற்கப்பட்டிருந்த ரூபா 20,941 நடைமுறையல்லாத சொத்துக்களுக்காக பெறுமானத்தேய்வினை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்குரிய செலுத்த வேண்டிய சம்பளம் ரூபா 30,000 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான இணங்காமை

2014 இன் 03 ஆம் இலக்க இலங்கை புவிச்சரிதவியல் நிறுவன அதிகாரச்சட்டத்தின் 11 (1) ஆம் பிரிவின் பிரகாரம் சபையினால் கூட்டுத்தாபனத்தின் நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கையொன்றை ஒவ்வொரு நிதியாண்டிற்காகவும் தயாரிக்கப்பட வேண்டியதுடன், அவ்வறிக்கை கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குக் கூற்றுக்களுடன் அடுத்த ஆண்டின் ஆறு மாதங்கள் கடப்பதற்கு முன்னர் சுற்றாடல் விடயத்திற்குரிய அமைச்சரின் அமைச்சின் செயலாளருக்கு 1980 இன் 31 ஆம் இலக்க அரசசார்பற்ற சமூக சேவைகள் அமைப்புக்களை (பதிவுசெய்தல் மற்றும் கண்காணித்தல்) அதிகாரச்சட்டத்தின் கீழ் நியமனம் செய்யப்பட்ட சமூக சேவைகள் அமைப்புக்களின் பதிவாளருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் சபையினால் அவ்வாறான அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிறுவகத்தின் நிதி விளைவுகள் ரூபா 371,363 மிகையாக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 331,113 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 40,250 இனால் அதிகரித்திருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது மீளாய்வாண்டின் செலவினம் ரூபா 135,676 ஆல் அதிகரித்திருந்த போதிலும் வருமானம் ரூபா 175,926 ஆல் அதிகரித்தமை மேற்படி அதிகரிப்பிற்கு பிரதான காரணங்களாக இருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

-----------------------------

### 4.1 செயலாற்றல்

-----------------

2014 இன் 03 ஆம் இலக்க இலங்கை புவிச்சரிதவியல் நிறுவன கூட்டிணைத்தல் அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் நிறுவனத்தின் பிரதான நோக்கங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(அ) புவிச்சரிதவியலுக்கு உரிய அறிவை பெற்றுக்கொள்ளல், விரிவாக்குதல் மற்றும் அறிவை பரிமாறிக் கொள்ளல்.

(ஆ) புவிச்சரிதவியல் விடயங்கள் தொடர்பிலான ஆராய்ச்சி நடவடிக்கைகளை ஊக்குவித்தல்.

(இ) வெவ்வேறு தரங்களில் அங்கத்துவத்திற்கு உள்ளடக்குவதற்காக விண்ணப்பத்தாரிகளின் தகைமைகளை பரீட்சித்தல்.

(ஈ) அதன் தொழில்சார் நடவடிக்கைகளை நிர்வகித்தல் மற்றும் வழமையான செயற்பாடுகளை உயர்தரத்தில் பேணுவதற்கு நிதி உதவியளித்தல்.

(உ) புவிச்சரிதவியல் தொழில்சார் நடவடிக்கைகளுக்குரிய அனைத்து விடயங்களிலும் தொழில்சார் மற்றும் ஒழுக்கம் சார்ந்த கொள்கைகள் மற்றும் நியமங்களை மேம்படுத்துதல் மற்றும் பராமரித்துச் செல்லலும் செயற்படுத்தலும்.

(ஊ) புவிச்சரிதவியலாளர்களின் அபிலாசைகள் மற்றும் நிலைமையை முன்னேற்றுதலும் மேம்படுத்துதலும்

(எ) நாட்டின் முன்னேற்றத்திற்கும் அபிவிருத்திக்கும் உரிய செயற்பாடுகளின் போது புவிச்சரிதவியலை அடிப்படையாக கொள்ளல் மற்றும் தொடர்புடைய விடயங்களில் அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு சேவைகளை வழங்குதல், மற்றும்

(ஏ) நிறுவனத்தின் நோக்கங்களை மேம்படுத்துவது தொடர்பில் இலங்கையினதும் ஏனைய நாடுகளினதும் சமமான தொழில்துறை நிறுவனங்களுடன் கூட்டிணைப்பை ஏற்படுத்துதல்.

மேற்குறிப்பிட்ட நோக்கங்களை நிறைவேற்றுவது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அங்கத்தவர்களை தரப்படுத்துவதற்குரிய நுழைவு மற்றும் ஒழுக்கம் சார்ந்த குழுவினை நியமித்து அதன் மூலம் மீளாய்வாண்டில் 70 அங்கத்தவர்களையும் அண்மித்த 17 அங்கத்தவர்களையும் 21 தொழிர்சார் புவிச்சரிதவியாளர்களும் தெரிவுசெய்யப்பட்டிருந்தனர்.

(ii) புவிச்சரிதவியாளர்கங்களுக்காக ஒழுக்கமான நடத்தை தொடர்பாக கோவையொன்று தயாரித்து ஒரு அங்கத்தவருக்காக மாததிரம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(iii) இலங்கை பொறியியலாளர் நிறுவகத்தின் வளவாளர்களை புவிச்சரிதவியல் நிறுவகத்தின் விரிவுரைகளுக்காக பங்குபெறச் செய்யப்பட்டிருந்தனர்.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

---

### 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

---

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2015 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 யூலை 03 ஆந் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 5.2 செயல்நடவடிக்கைத் திட்டம்

---

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

---

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.2 ஆம் பிரிவின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான பாதீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.